அகிம்சை வழியில் ஒரு துவக்கம்

## பத்திரிக்கை செய்தி - 07/07/18

## தமிழக அரசு – மக்கள் கருத்து கேட்டபின் லோக் ஆயுக்தா சட்டத்தை நிறைவேற்றுங்கள்

## அமைச்சர் ஜெயகுமாரை பொது விவாதத்திற்கு அழைக்கிறோம்

பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை அமைச்சர் ஜெயகுமார் அவர்கள் ஊழல் ஒழிப்பு லோக்ஆயுக்தா சட்டத்தை இந்த சட்டசபை கூட்டம் முடிவதற்குள் நிறைவேற்றபோவதாக கூறியுள்ளார். இந்த கூட்டத்தொடர் முடிய திங்கட்கிழமை ஒரு நாள் தான் உள்ளது. தேர்ந்தெடுக்கப்படும் அரசியல்வாதிகள் மற்றும் உயர் IAS அதிகாரிகளையும் விசாரிக்கக் கூடிய லோக் ஆயுக்தா சட்டத்தை மக்கள் கருத்தும் கேட்காமல் விவாதமும் இல்லாமல் நிறைவேற்ற விரும்புவது ஏன்? அறப்போர் இயக்கம் அமைச்சர் ஜெயகுமார் அவர்களை லோக் ஆயுக்தா பொது விவாதத்திற்கு அழைக்கிறது.

லோக்பால் மற்றும் லோக்ஆயுக்தா சட்டம் 2013, பாராளுமன்றத்தில் நிறைவேற்றி ஜனவரி 2014 ல் சட்டமாக்கப்பட்டது. அதன் ஒரு வருட காலத்திற்குள் மாநிலங்கள் அனைத்தும் லோக்ஆயுக்தா சட்டம் கொண்டு வர வேண்டும் என்று பிரிவு 63ல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தமிழக அரசு இதை நிறைவேறாமல் இருக்க 4 ஆண்டுகளாக அனைத்து தாமதப்படுத்தும் வியூகங்களையும் கையாண்டது. மத்தியில் இருக்கும் லோக்பால் சட்ட திருத்தத்திற்காக காத்திருக்கிறோம் என்றார்கள். ஆனால் அதற்கும் மாநிலத்தில் லோக் ஆயுக்தா சட்டம் அமைவதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று பலமுறை கூறினோம். சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கும் தொடுத்தோம். அது நிலுவையில் உள்ளது.

தமிழக அரசாங்கம் உச்சநீதி மன்றத்தில் நடைபெறும் அஸ்வினி குமார் உபாதியாய் vs இந்திய அரசு மற்றும் பலர் வழக்கில் தாக்கல் செய்த பிரமான பத்திரத்தில் லஞ்ச ஒழிப்புத்துறை ஏற்கனவே இந்த லோக் ஆயுக்தா வேலையை செய்து கொண்டிருக்கிறது

என்றும் கண்காணிப்பு ஆணையம் இருக்கும் பொழுது லோக்ஆயுக்தா அமைப்பதற்கான தேவைக்கான சம்பந்தம் என்னவென்று தெரியவில்லை என்றும் கூறியுள்ளனர். தெளிவாக லோக் ஆயுக்தா அமைப்பதற்கான எந்த ஒரு எண்ணமும் இல்லாததை காட்டுகிறது. மத்தியில் சட்ட திருத்தம் வர காத்திருக்கிறோம் என்ற விவாதம் உள்பட அனைத்தையும் உச்சநீதிமன்றம் நிராகரித்து ஜூலை 10 க்குள் லோக் ஆயுக்தா அமைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து சொல்ல வேண்டும் என்று கூறியுள்ளது. இதனாலேயே தமிழக அரசு இந்த சட்டத்தை கொண்டு வருகிறது.

அறப்போர் இயக்கம் தமிழகத்தில் சுதந்திரமான லோக் ஆயுக்தா சட்டம் கொண்டு வருவதற்காக கடந்த மூன்று ஆண்டுகளாக பரப்புரை செய்து வருகிறோம். மார்ச் 12, 2016-ல் அறப்போர் இயக்கம் லோக் ஆயுக்தாவிற்கான மாதிரிச் சட்டம் ஒன்றை வெளியிட்டது. இது முன்னாள் லோக் ஆயுக்தா நீதபதி திரு.சந்தோஷ் ஹெக்டே, முன்னாள் IAS திரு. பூர்ணலிங்கம், முன்னாள் துணைவேந்தர் திருமதி வசந்தி தேவி, மறைந்த எழுத்தாளர் ஞானி மற்றும் வழக்கறிஞ்சர் சுரேஷ் போன்ற நிபுணர்களின் அறிவுரையையும் மக்கள் கருத்துகளையும் கொண்டு உருவாக்கப்பட்டது. இதையும் அரசுக்கு பல முறை அனுப்பியுள்ளோம்.

அறப்போர் இயக்கம் கடந்த மே 18 அன்று லோக்ஆயுக்தா சட்ட முன்வரைவை மக்கள் பார்வைக்கு வைத்து, மக்கள் கருத்து கேட்பு நடத்தவேண்டுமென்று தலைமை செயலாளர், சட்ட அமைச்சர், சட்ட செயலாளர் என அனைவருக்கும் மனு அனுப்பினோம். தலைமை செயலாளர் அலுவலகம் அதை பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்த துறைக்கு அசலாக அனுப்பி வைத்தது. துறையையும் அமைச்சர் ஜெயக்குமாரையும் பலமுறை தொடர்பு கொள்ள முயற்சித்த பின்னரும் எந்த பதிலும் இல்லை. இன்று பாராளுமன்றம் அனைத்து சட்டமுன்வரைவையும் மக்கள் பார்வைக்கு வைக்கும் போது முக்கியத்துவம் வாய்ந்த இந்த சட்டத்திற்கு தமிழக அரசு மக்கள் கருத்து கேட்க மறுப்பது ஏன் ?

தலைமை செயலாளர், சட்ட செயலாளர், சட்ட அமைச்சர், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்த துறை செயலாளர் என அனைவரும் இதுகுறித்து சந்திக்க நேரம் கொடுக்க மறுத்து வருகின்றனர். சட்டதுறை செயலாளர் அலுவலகம் இந்த சட்டத்திற்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்றே சொல்லிவிட்டனர்..

தமிழக முன்னாள் முதல்வர் ஊழல் குற்றச்சாட்டில் தண்டனை பெற்றவர். தமிழகத்தில் மூத்த அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் ஊழலுக்காக முதல் கட்ட விசாரணை கூடச் செய்யப்பட்டு பல வருடங்கள் ஆகின்றன. எனவே சுதந்திரமான, வலுவான ஒரு

லோக் ஆயுக்தா அமைவது அவசியம். நிதி, செயல்பாடு, நியமனம் ஆகிய மூன்று வகைகளிலும் இந்த அமைப்பு சுதந்திரம் பெற்றிருக்க வேண்டும்.

ஆனால் அரசு ஒரு நீர்த்துப் போன லோக் ஆயுக்தாவை அமைக்கும் வகையில் சட்ட வரைவை வெளியிடும் என்று அச்சம் எழுகிறது. எனவே வரைவுத் திட்டத்தை அரசு மக்கள் கருத்துக் கேட்புக்கு ஒரு மாத காலத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு பெறப்படும் மக்களின் கருத்துக்களை ஒட்டி சட்டம் வலுவானதாக ஆக்கப்பட வேண்டும்.

ஒரு லோக் ஆயுக்தா அமைப்பின் இன்றியமையாத கீழ்காணும் அம்சங்களை இந்த மாதிரிச் சட்டம் கொண்டிருந்தது.

- தற்போதைய ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையை லோக் ஆயுக்தாவின் கீழ் கொண்டு வந்து அதன் புலனாய்வு துறையாக மாற்றுவது.
- சார்பற்ற லோக் ஆயுக்தாவை நியமனம் செய்ய, அதற்கான தேர்வு குழு, முதலமைச்சர், சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர், சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் உயர் நீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகள் ஆகியவர்களைக் கொண்டிருக்க வேண்டும் என்னும் விதி அமைப்பது.
- புலனாய்வு மற்றும் விசாரணைக்கு ஆறு மாத காலக்கெடு விதிப்பது.
- முதல்வர் முதல் கவுன்சிலர்கள் வரை அனைத்து பொது ஊழியர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளை ஊழல் குற்றங்களுக்காக எந்த முன் அனுமதியும் இன்றி விசாரிக்கலாம் என்னும் விதி அமைப்பது.
- மாநிலத்தின் மொத்த நிதி ஆதாரத்தில் இருந்து லோக் ஆயுக்தாவிற்கு நிதி ஒதுக்குவது
- முகாந்திரம் இருந்தால் லோக் ஆயுக்தா அநாமதேய புகார்களின் பெயரில் தாமாகவே விசாரணை தொடங்கலாம் என்னும் விதி அமைப்பது.
- சேவை உரிமை மூலமாக லோக் ஆயுக்தாவிடம் மக்கள் தம் குறைகளை எடுத்துச் செல்ல வழிவகை அமைப்பது.
- பொது ஊழியர்களின் சொத்து விவரங்களை லோக் ஆயுக்தாவிடம் சமர்ப்பித்து அவற்றை மக்கள் பார்வைக்கு ஒவ்வொரு வருடமும் வைக்க வழி செய்வது

அரசு மக்கள் கருத்து கேட்பு நடத்தாததால் அறப்போர் இயக்கம் நாளை ஞாயிறு 08/07/2018 மாலை 4.30 மணிக்கு நுங்கம்பாக்கம் ருட்லாந்து கேட் தெருவில் உள்ள ஆஷா நிவாசில் நடத்த உள்ளோம். அமைச்சர் மற்றும் தலைமை செயலாளரை அழைத்துள்ளோம். மக்கள்

கருத்தை கேட்காமல் வலுவற்ற லோக்ஆயுக்தா கொண்டு வரும் பட்சத்தில் அறப்போர் இயக்கம் அதை கடுமையாக எதிர்த்து போராடும்.

ஜெயராம் வெங்கடேசன்
ஒருங்கிணைப்பாளர் – அறப்போர் இயக்கம் (Ph: 9841894700)

பு. நக்கீரன்
செய்தி தொடர்பாளர் – அறப்போர் இயக்கம் (Ph: 9003086894)